தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை
மலர் 2, இதழ் 1, 2021
ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்
பன்னாட்டுத் தரப்புத்தக எண்: 9788194845959
இணையதளம்: http://restpublisher.com/book-series/ctll/

# புறப்பொருள் வெண்பாமாலை உணர்த்தும் தமிழர் போர் மரபுகள்

ம.லொயோலா சாமிதாஸ்
உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர்.

## தொடக்கவுரை

தமிழில் அகம், புறம் என வழங்கும் இரண்டு திணைகள் உள்ளன. தொல்காப்பியரின் கருத்துக்களும் புறப்பொருள் வெண்பாமாலையின் கருத்துக்களும் தொடர்பு கொண்டுள்ளன. முத்தமிழில் ஒன்றான இயல் தமிழுள் இலக்கிய இலக்கணங்கள் அடங்கும். காதலும் வீரமும் தமிழரின் அகப்புற வாழ்க்கையின் அடிப்படை கோட்பாடு என்பர்.இரண்டு பொருண்மையையும் குறித்துத் தோன்றிய இலக்கணம் பொருள் இலக்கணம் எனப்பட்டது.அறம் பொருள் என்னும் இயல்பினை உடையதாய்ப் புறத்தே நிகழும் ஒழுக்கம் புறமாகும்.வெண்பா யாப்பு என்ற பூவைக் கொண்டு போர் பற்றிய ஒழுக்கங்களை தொடர்ச்சியாக அறாத வண்ணம் ஓர் ஒழுங்கமைய தொடுக்கப்பட்டமை கருதி மாலை என்ற சொல் புறப்பொருள் வெண்பா என்பதன் பின் வைக்கப்பட்டுள்ளது.

### புறத்திணைகள் செய்தியை மொழியும் பழஞ்செய்யுள்

"வெட்சி நிரைகவர்தல்; மீட்டல் கரந்தையாம்;
வட்கார்மேற் செல்வது வஞ்சியாம்; - உட்காது
எதிரூன்றல் காஞ்சி; எயில்காத்தல் நொச்சி;
அதுவளைத்தல் ஆகும் உழிஞை; - அதிரப்
பொருவது தும்பையாம்; போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்."

### உயிரிகளின் பண்பு

போர்ப் பண்பு உயிரிகளின் குணமாக உள்ளது. போராட்டம் என்பது உயிரிகளின் இயற்கையான ஒரு பகுதி.போர் புரிவதையும் உலகத்தின் இயற்கையாகவே நம்முடைய சங்கப் புலவர்களும் கருதியுள்ளனர். இதனை, புறநானூற்று அடிகள் மெய்ப்பிக்கின்றன.

"ஒருவனை ஒருவர் அடுதலும், தொலைதலும்
புதுவது அன்று: இவ் உலகத்து இயற்கை;
இன்றின் வாங்கோ கேளலம்; திரளரை
மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பவரொடு மிடைந்து,"
(புறநானூறு-பாடல்76)

ஒருவனை ஒருவன் கொல்லுதலும் ஒருவனுக்கு ஒருவன் தோற்றலும், இந்த உலகத்திலே புதுமையன்று.கவிஞர்களின் பாடுபொருள் என்பது காலத்திற்குக் காலம் விரிந்து கொண்டே செல்கிறது.

### போர்க்கான சிறப்புக் காரணங்கள்

போர் என்பது தனிநபர் செயல்களின் கூட்டு விளைவாகும்.

அதிகாரம்,பதவி, ஆதிக்கம், புகழ் செல்வம்,பெருமை ஆகியவற்றை தொடர்ந்து தேடிக்கொண்டு வெளிச் சமூகத்தை

மாற்ற முயல்வது.

அதிகாரம்,பதவி, ஆதிக்கம், புகழ் செல்வம்,பெருமை ஆகியவை பிறரிடம் இருப்பதைக் கண்டு பொறாமை கொள்வது.அதிகாரப் பேராசை கொண்டிருத்தலும், அழுக்காறு(பொறாமை) கொண்டிருத்தலும்.

நாட்டின் மேல் கொண்ட பற்று, கொடியைக் வணக்கம் செய்வது, கொள்கை வழிபாடும், மரபினை வெளிப்படுத்தும் சமூக சூழலும் காரணங்களாகும்.

வெற்றியையும் நாடு பிடித்தலையும் மானமாகப், பொருள் வருவாயாகக் கருதி அதனைப் பெரிதும் விரும்புதல்.

காவல் மரம் புனிதமானது தெய்வம் வசிக்கக் கூடியது என்ற எண்ணம்.

நமக்கு அடிப்படைத் தேவையான உடலியல் அடிப்படையிலான பாதுகாப்பு, உணவு, உடை, உறைவிடம் இவை அழிக்கப்படும் போதும்,இவற்றை பெற முயற்சி எடுக்கப்படும் போதும் போர் எழுகிறது.

மன்னனின் கருவூலம் காலியாகும் போது மன்னனுக்குக் கைகொடுப்பது திறைப் பொருள் ஒன்றே ஆகும். அத்தகையத் திறைப் பொருள் பெறுவதற்கு போர் தேவையாகிறது.

மனவியல் அடிப்படையில் பாதுகாப்பைத் தேடும் போதும், அதனை உறுதி செய்ய, நிலைத்தன்மை அடைய முயலும்போதும் போர் எழுகிறது.

போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தவர் வீடுபேறு அடைவர் என்ற நம்பிக்கை பழந்தமிழரிடையே இருந்தது.

தமிழ் சிற்றரசர்கள் முடியுடைய வேந்தர்களுக்கு இடையேயான குலப் பகைமை உணர்வு மேலோங்கிய நிலை.

மகள்மறுத்து மொழிதல் (பெண் கொடுக்க மறுத்தலால்) ஏற்படும் பகைமை உணர்வு.

போரில் இறந்த மறவரின் நினைவாக நடப்படும் கல் நடுகல். அதில் மறவரின் பெயரும் பெருமையும் பொறிக்கப்பட்டிருக்கும்.நடுகல்லில் பெயர் பெருமை இடம் பெற வேண்டும் என்ற பேராவல்.

அறத்திற்கும் ஏனை மறத்திற்கும் துணையாக நிற்பது அன்புதான் இருந்தது. அவ்வன்பு தான் தமிழ் மறவர்கள் அறவழியில் போரியற்ற அவர்களைச் செலுத்தியது.

ஆதிக்க மனப்பான்மை அனைவரையும் அடக்கி ஆளவேண்டும் என்று எண்ணம் கொண்ட முடிமன்னர்களிடம் இருந்தமை.

முதுகுடி மகளின் மறக்குலத்தால் உந்தப் பெற்ற வீரவுணர்ச்சி சமூக கட்டமைப்பின் பால் உந்தப்பட்ட கொள்கை பிடிப்பு.

போர்ப் பண்பு, உயிர் வாழ்வதற்கான போராட்ட உணர்வு உயிரிகளின் இயற்கை குணமாக உள்ளது.

திறை செலுத்தும்படி முடியுடைய வேந்தர்கள், சிற்றரசர்களை வற்புறுத்தல், அளவிற்கு அதிகமான நிர்ணயிக்கப்படாத திறைப்பொருளை அளவிற்கு அதிகமாக பெற முயலும் போதும், முடியுடைய வேந்தர்களை அடிபணிந்து நடக்க வேண்டும் கடின சூழல் முதலிய காரணங்களும் போர் எழ காரணி ஆகும்.

மண்ணாசை, பொருளாசை, பெண்ணாசை பெரும்பான்மையும் இந்த மூன்று காரணங்களாலேயே போர் நடந்திருப்பதைத் தமிழிலக்கியங்கள் மொழிகின்றன.

இவை அனைத்தும் தமிழகத்துப் போர்களுக்குரிய பொதுக் காரணங்களாக, பட்டியலிடபட்ட முனைவர் ந.சுப்பிரமணியன் அவர்களின் கருத்துகளும் உள்ளடங்கியவை ஆகும்.

## போர் காலத்தில் காக்கப்பட வேண்டியவர்கள்

போர் 'மறம்' என்றாலும் அதனை நிகழ்த்துவதில் அறம் மேற்கொள்ளப்பட்டது. போர் அறத்தை,

"ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும் பேணித்,
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்,
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும், தும்அரண சேர்மின்"

என்ற புறநானூறு பாடலின் எச்சரிக்கை மொழிகளில் காண்கின்றோம். வலிமை உடையரோடு எதிர்த்துப் போரிடுவதே ஆற்றல் உடையவரின் இயல்பு; எனவே இம் மன்னன், தான் முற்றுகையிடும் நகர்களில் உள்ள வலிமை

அற்றாரைப் பாதுகாவலான இடஞ் சேருமாறு முதற்கண் எச்சரிப்பான் என்கிறார் புலவர். அவ்வாறு எச்சரிக்கப்படுவோர் பயன்தரும் ஆனினம், அவ்வியல்புடைய பார்ப்பன மக்கள். பெண்டிர், பிணி உடையவர், புதல்வர்ப் பெறாதோர் ஆவர். இவ்வாறு அறவழி நடக்கும் இயல்பும், துணிவும் உடையவன் எம் மன்னன் என்று மொழிகிறார் புலவர்.

இப்பாதுகாப்பு, போரின் முன்நிகழ்வு. இவ்வாறே, போர்க்களத்தின்கண் மேற்கொள்ள வேண்டிய அறநெறியும் உண்டு.

**ஒற்று அறிதல்**

ஆநிரைகளைக் கவர்வதற்குரிய சூழலை ஒற்றர்கள் சென்று வேவு பார்த்து வந்து கூறுவது வேய் என்னும் வெட்சித்துறை ஆகும்.

"பற்றார் தம்முனைப் படுமணி ஆயத்து
ஒற்று ஆராய்ந்த வகையுரைத் தன்று"

யாரும் அறியாதவாறு, மணிகள் கட்டியுள்ள பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவர்வதற்கான சூழலை ஒற்றறிந்து வந்து உரைப்பதாகும்.

**நிமித்தம் பார்த்தல்**

நடக்கப் போகும் செயலின் நிமிர்த்தமாக நற்சொல் கேட்டல் விரிச்சி என்னும் வெட்சித்துறை ஆகும்.

"வேண்டிய பொருளின் விளைவுநன்கு அறிதற்கு,
ஈண்டுஇருள் மாலைச் சொல்ஓர்த் தன்று"

நள்ளிரவில் பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவர்ந்த வருவதற்காக மாலை மயங்கி இருளாகும் நேரத்தில் கூடியிருந்த மறவர்கள் நற்சொல் கேட்கக் காத்திருப்பது விரிச்சி ஆகும்.

**சூளுரைத்தல்**

கடுமையான சினத்தைக் கொண்ட காஞ்சி மன்னன், வஞ்சி வேந்தனாகிய பகை மன்னனைப் பணிய வைக்க வஞ்சினம் கூறுதலாகும்.

"இன்று பகலோன் இறவாமுன் ஒன்னாரை,
வென்று களம் கொள்ளாது வேல் உயர்ப்பின் - என்றும்,
அரண் அவியப் பாயும் அடையார்முன் நிற்பேன்,
முரண் அவிய முன்முன் மொழிந்து"

இன்றைய நாள் சூரியன் சாய்வதற்கு முன்னாகப் பகைவரைக் களத்தில் வென்று வேலினை உயர்த்திப் பிடிக்காவிட்டால் தோற்றவன் ஆவேன்; என் அரணை அழிக்கப் பாய்ந்து வரும் பகைவர் முன் பணிவான மொழியைப் பேசி எந்நாளும் வணங்கி நிற்பேனாக!

என மண்ணாசை கொண்டு தன் நாட்டின் மீது படையெடுத்து வந்த வேந்தனை புறமுதுகிடச் செய்யக் காஞ்சி மன்னன் சீற்றம் கொள்வது வஞ்சினக் காஞ்சி என்னும் காஞ்சி துறையாகும்

**பூக்களைச் சூடி போரிடும் மரபு**

மன்னன் பூவினைக் கொடுக்கக் மறனுடை மறவர்கள் அதனைக் கொள்வது, பூக்கோள் ஆகும். வஞ்சியாரின் போரை எதிர்கொள்வதற்காகக் காஞ்சி மன்னன் பூவினைக் கொடுக்க, அவன் மறவர் அதனைப் பெற்றுக் கொள்ளும் நிலை, பூக்கோள் நிலை எனப் பெற்றது.

"கார்எதிரிய கடல்தானை
போர்எதிரிய பூக்கொண்டன்று"

கரிய மேகத்தைத் தாங்கிய கடலைப் போலுள்ள தன் பெரும்படை மறவர்கள், வஞ்சி வேந்தனால் வந்துற்ற போரை எதிர் கொள்ளும் பொருட்டுக் காஞ்சி மன்னன் பூவினை வழங்கினான். அவனுடைய மறவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டதைக் கூறுவது, பூக்கோள் நிலை என்னும் துறையாம்.

**விருந்துண்ணுதல்**

"திருந்தார் தெம்முனை தெறுகுவர் இவர் எனப்,

பெரும் சோறு ஆடவர் பெறும் முறை வகுத்தன்று"

பகைவர் போர் முனையை அழிக்க வல்லவர் எனக் கருதிய வஞ்சி வேந்தன். வஞ்சி மறவருக்கு முறை அறிந்து பெருஞ்சோறு வழங்குதலாகும்.

"இயவர் புகழ எறிமுரசு ஆர்ப்பக்,

குயம் வரிவேங்கை அனைய - வயவர்,

பெறும் முறையால் பிண்டம் கோள் ஏவினான் பேணார்,

இறு முறையால் எண்ணி இறை"

பாணர் முதலிய இசைவாணர்கள் புகழவும், கொட்டு முரசு முழங்கவும் அரிவாளைப் போன்ற வரிகளை உடைய வேங்கைப் புலி அனைய தன்படை மறவர்களுக்கு வஞ்சி வேந்தன் முறைப்படி சோற்றுத் திரளைப் பெற்றுக் கொள்ளச் செய்தான்,

**விழுப்புண்பட்டு கிடப்பதும், இறப்பதுமே பெருமை**

**விழுப்புண்ணொடு வருதல்**

வெட்சியாரிடம் இருந்து ஆநிரைகளை மீட்கச் சென்ற கரந்தை வீரன் விழுப்புண் பட்டுத் திரும்பி வருவதைக் குறிப்பது புண்ணொடு வருதல் என்னும் கரந்தைத் துறை ஆகும்.

"மண்ணோடு புகழ்நிறீஇப்

புண்ணொடுதான் வந்தன்று"

ஆநிரை மீட்கச் சென்ற கரந்தை வீரன், உலகம் உள்ள காலம் தன் புகழ் நிலைபெறுமாறு வெட்சியாருடன் போரிட்டு விழுப்புண்ணுடன் நாடு திருப்புதலாகும்.

தம் மன்னருக்காகப் போரிட்டு களத்தில் மடிவதே உயரிய வாழ்க்கை எனக் கருதுதல் வேத்தியல் மலிபு.

**போர்க்காலத்தில் பெண்களின் நம்பிக்கைகள்**

"வாலிழையோர் வினைமுடிய

வேலனொடு வெறியாடின்று"

அழகிய அணிகலன்களை அணிந்த மகளிர் தங்கள் கணவர் மேற்கொண்ட ஆநிரை கவர்தல் வெற்றி பெற்றமைக்காக வேலனோடு வெறியாட்டு நிகழ்த்துதலாகும்.

"காணில் அரனும் களிக்கும் கழல்மறவன்,

பூணிலங்கு மென்முலைப் போதரிக்கண்-வாள்நுதல்,

தான்முருகு மெய்ந்நிறீஇத் தாமம் புறந்திளைப்ப,

வேல்முருகற்கு ஆடும் வெறி"

-(புறப்பொருள் வெண்பாமாலை வெட்சிப் படலம்)

வெறியாட்டு ஆடுபவள் ஆநிரை கவர்ந்து வந்த வீரக்கழல் அணிந்த வெட்சி மறவனின் மனைவி;அணிகலன்கள் ஒளிறும் மென்மையான கொங்கையை உடையவள்; பூப்போன்ற செவ்வரி படர்ந்த கண்ணினை உடையவள்; ஒளிரும் நெற்றியை உடையவள். அம்மங்கை கழுத்திலுள்ள மாலை அங்கும் இங்கும் ஆடும்படியாக, முருகப் பெருமானுக்காக ஆடும் வெறியாட்டைக் கண்டால் கூத்தப் பெருமானாகிய சிவபெருமானு பெருமகிழ்வு கொள்வான்.

**முதுகுடி மகளின் வீரம்**

ஆடவரைப்போல் முதுகுடி மகளிர்க்கும் மறமாகிய வீரவுணர்ச்சி உண்டு என்பதையே,

"அடல்வேல் ஆடவர்க் கன்றியும் அவ்வில்,

மடவரல் மகளிர்க்கும் மறம்மிகுத் தன்று"

என்ற மூதின் முல்லை என்னும் வாகைத் துறையாகும். இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாய் புறப்பொருள் வெண்பாமாலையில் பாடல்கள் உண்டு.

"வந்த படை நோனாள் வாயின் முலை பறித்து,

வெந்திறல் எஃகம் இறைக் கொளீஇ-முந்தை,

முதல்வர் கல் தான்காட்டி மூதில் மடவாள்,

புதல்வனைச் செல்க என்றாள் போருக்கு"

(புறப்பொருள்.வெ.மாலை பாடல்-175)

தொன்மை மிக்க மறக் குடியில் பிறந்தவள், தன் நாட்டின் மேல் பகைவர் போருக்கு வந்துள்ளதை அறிந்து பொறுக்க மாட்டாமல் தன் மார்பகத்தில் பால் குடிக்கும் புதல்வனைப் பறித்து எடுத்தாள்; வலிமை மிக்க வேலினை அவன் கையில் கொடுத்தாள். போர்க்களத்திற்குக் கூட்டிச் செல்லும்போது முன்னோர்களின் நடுகற்களைக் காட்டி, 'செல்வாய்' என்றாள்.இந்த அளவுக்குத் தமிழக மகளிர் தம் கணவன்மாருக்குப் பெருமை தேடித்தந்தனர்.

**அகழியிடத்துப் போர்**

"அடங்காதார் மிடல்சாயக்

கிடங்கிடைப் போர்மலைந்தன்று"

பகைவராகிய நொச்சியாரின் வலிமை கெடும்படி உழிஞை மறவர் போர் செய்தனர். அப்போர் அகழியிடத்து நடைபெற்றது. அதன் நிலையைக் கூறுவது பாசிநிலையாகும்.

"நாவாயும் தோணியும் மேல்கொண்டு நள்ளாதார்,

ஓவார் விலங்கி உடலவும் - பூவார்,

அகழி பரந்(து) ஒழுகும் அம்குருதிச் சேற்றுப்,

பகழிவாய் வீழ்ந்தார் பலர்."

-(புறப்பொருள் வெண்பாமாலை உழிஞைப் படலம்)

காவற்காட்டை அழித்த உழிஞைமறவர் அடுத்திருந்த. அகழிக்கரைக்கண் வந்து தங்கினர். அவர்களை முன்னேறவிடாமல் ஓடம், மரத்தோணி ஆகியவற்றைக் கொண்டு நொச்சி மறவர் இடைவிடாது போரிட்டனர். அவ்வாறு தடுத்தோரை உழிஞைமறவர் எதிர்த்துப் போர் செய்தனர். அதனால் மலர்நிறைந்த அகழியில் மிகுந்து ஓடுகின்ற குருதிச்சேற்றில் பகைவரின் அம்பு பட்டு உழிஞைமறவர் பலர் வீழ்ந்து இறந்தனர்.

**கள்ளும், ஊன்சோறும்**

உண்டாட்டு என்பது உண்டு + ஆட்டு - உண்டாட்டு. கள்ளும் ஊன்சோறும் உண்பதை 'உண்டு' என்பது காட்டுகிறது. வேந்தன் தகுதி அறிந்து சிறப்புச் செய்தமையாலும் கள்ளுண்டமையாலும் மனம் களிப்பெய்தி ஆடியதை ஆட்டு என்பது மொழிகிறது. எனவே, இந்தத் துறை உண்டாட்டு எனப் பெற்றது.

"தொட்டு இமிழும் கழல் மறவர்

மட்டு உண்டு மகிழ்ந்தூங் கின்று"

காலில் கட்டப்பட்ட வீரக் கழல்கள் ஒலிக்க, கள்-மதுவினை உண்ட வெட்சி மறவர்கள் மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடி மகிழ்தலாகும்.

**காவல் மரம்**

காவல் மரம் தெய்வத் தன்மை பெற்றிருந்ததாக எண்ணப்பட்டது. காவல் மரம் வெட்டப்பட்டால் அந்நகரம் அழிந்துவிடும் என்பது நம்பிக்கையாக இருந்து வந்தது.

**நடுகல்**

போரில் உயிர்நீத்த வீரனுக்கு, அவனுடைய பெயரையும் வீரப்புகழையும் கல்லில் பொறித்து அவன் நினைவாகப் பலரும் வழிபடுமாறு கல் நடுவதை நடுகல் என்பர்.தொல்காப்பியர் நடுகல் எடுத்தலை வெட்சித் திணையில் குறிப்பிட்டுள்ளார்.புறப்பொருள் வெண்பா மாலை நடுகல் அமைத்தலைத் துறைகளாகப் பொதுவியல் திணையில் கூறுகிறது.

"சீர்சால் போந்தை வேம்பொடு ஆரே
உன்ன நிலையே ஏழ்க நிலையே
கழல்நிலை ஏனைக் கற்காண் டல்லே
கல்கோள் நிலையே கல்நீர்ப் படுத்தல்
கல்நடு தல்லே கல்முறை பழிச்சல்
இல்கொண்டு புகுதல் எனப் பன்னிரண்டும்
பொதுவியல் பால என்மனார் புலவர்"
(புறப்பொருள் வெண்பாமாலை பொதுவியல் நூற்பா 10)

கல்காண்டல், கல்கோள் நிலை, கல் நீர்ப்படுத்தல், கல் நடுதல், கல் முறைப்பழிச்சல், இற்கொண்டு புகுதல் என்பன நடுகல் பற்றிய துறைகள்.

**நிறைவுரை**

சங்க காலத் தமிழர் காதல் வீரம் இரண்டையும் தமது இரு கண்களாக கருதினர்.போரில் உயிர்நீத்த வீரனுக்கு, அவனுடைய பெயரையும் வீரப்புகழையும் கல்லில் பொறித்து அவன் நினைவாகப் பலரும் வழிபடு நிலையை புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது.போர் களத்திலும் அறநெறியைப் பின்பற்றிய மறக்குடி தமிழரின் உயரிய பண்பு வெளிப்படுவதை அறியமுடிகிறது.வாழ்க நற்றமிழ், வாழ்ந்தோங்குக தமிழக மகளிரின் தனிப் பெரும் பண்பாடு.

**துணை நூற்பட்டியல்**

1.ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை தெளிவுரை முனைவர் ச. திருஞானசம்பந்தம், கதிர் பதிப்பகம் திருவையாறு 2017.

2.புறப்பொருள் வெண்பாமாலை ஐயனாரிதனார் உரையாசிரியர் முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்,இயல் வெளியீடு,தஞ்சாவூர்,2018.

3.தமிழ் இணையக் கல்விக்கழகம்.

4. கழகத் தமிழ் அகராதி, சை.சி. நூ. கழகம், சென்னை.